JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

C.C.No.368/2012 Date: 16.12.2019. P.W. 1

பெயர் : கே. மனோகரன்
தந்தை பெயர், க/பெ : கந்தசாமி
முகவரி :
கிராமம் :
மாவட்டம் :
ஜாதி :
தொழில் :
மதம் :
வயது :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 16th day of December 2019.

**முதல் விசாரணை** - நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். 30.04.2017ம் தேதி G.C. Avadi CRPF Commandant பணிபுரிந்து ஒய்வு பெற்றேன். 07.05.2008ம் வருடம் Group centre Avadi க்கு Deputy Commandant -ஆக 77வது பட்டாலியனிலிருந்து பணிமாறுதல் பெற்று மேற்படி பணியில் Deputy Commandant Administration யாக 16.05.2008யிலிருந்து பணி ஏற்றேன். எனக்கு கூடுதல் பொறுப்பாக Account officer- ஆக Group centre Avadi யில் பணி புரிந்து வந்தேன். அப்போது Cashier யாக ஆஜர் எதிரி சீனிவாசன் பணி புரிந்து வந்தார். 20.03.2008 தேதி முதல் எதிரி Cashier- யாக பணிபுரிந்து வந்தார். 2008 முதல் 2009 வரை எதிரி எங்கள் அலுவலகத்தில் Cashier- யாக பணிபுரிந்த போது ரூ. 2,80,155/—ஐ கையாடல் செய்து உள்ளார். 04.09.2008ம் தேதி Deputy Commandant பணி புரிந்த ரோகினி ராஜா Account officer-ஆக கூடுதல் பணியிலிருந்த போது ரூ. 604/— ஐ ரோகினி ராஜா எதிரியிடம் SBI Bank HVF கிளையில் செலுத்துவதற்காக எதிரியிடம் ஒப்படைத்து உள்ளார். மேற்படி தொகை 28வது பட்டாலியனிற்கு வழங்குவதற்கு கொடுக்கபட்ட பணம் ஆகும். அதே போல் 04.09.2008ம் தேதி ரூ. 6,657/—ஐ மேற்படி அதே வங்கியில் செலுத்துவதற்காக Deputy Commandant ரோகினி ராஜா எதிரியிடம் மேற்படி தொகையை ஒப்படைத்து உள்ளார். மேற்படி தொகையை எதிரி வங்கியில் செலுத்தாமல் கையாடல் செய்து உள்ளார். எதிரியின் பணி ஆனது Pay and account office-லிருந்து வரும் Bank Draft மற்றும் வேறு பட்டாலினிலிருந்து Additional DIGP.GC, CRPF ஆவடியில் இருந்து வரும் அனைத்து தொகைகளையும் எதிரி பெற்று அதை அலுவலகத்தில் பராமரிக்கபடும் கணக்கு புத்தகத்தில் வரவு வைத்து வரவு வைக்க வேண்டியது அவருடைய கடமை ஆகும். மேலும் அலுவலகத்தில் வரவு செலவு கணக்குகளை Register யில் கணக்கு வைத்து அன்றைய தினமே தலைமை கணக்காளரிடம் ஒப்புதல் பெற்று பின்னர் Account officer- யிடம் சமர்பிக்க வேண்டும். மேலும் எதிரியிடம் ஒப்படைக்கும் தொகைகளை எதிரி அலுவலக வங்கி கணக்கில் செலுத்தி அதற்காக ஒப்புகை பெற்று அலுவலக Cash book யில் பதிய வேண்டும். மறுநாளே Cash book யை Account officer -யிடம் சமர்பித்து அதற்கான ஒப்புகையை பெற வேண்டும். மேலும் Accounts Manual 1976 CRPF பத்தி 1.9ல் எதிரியின் கடமையும் பொறுப்பும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் Establishment Manual – லில் 1976 CRPF பத்தி 1.57 ல் எதிரி பராமரிக்கப்பட வேண்டிய அனைத்து பொறுப்புகளும், ஆவணங்களும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அரசு தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளின் பேரில் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** இல்லை.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur.